1 டிசம்பர் 2024
திருவருகைக் காலத்தின் முதல் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள் **எதிர்நோக்கின் திருப்பயணிகள்**

# தயாராயிருங்கள்

திருவருகைக் காலம் என்பது தயாரிப்பின் காலம். கிறிஸ்துவுக்காக விழிப்புடன் இருக்கவேண்டிய காலம். தூய வாழ்வு வாழ மறுமொழி தரவேண்டிய காலம். இன்றைய வாசககங்களை நாம் வாசிக்கும்போது, தூய ஆவியார் நம்மிடம் பேச அவரை நாம் அனுமதிப்போம்.

இழப்பினால் பாதிக்கப்பட்ட கடவுளின் மக்களை இறைவாக்கினர் எரேமியா அணுகிச் செல்கிறார். “இதோ நாள்கள் வருகின்றன” ஆண்டவர் இறைவாக்கினர்கள் வழியாகப் பேசுகிறார். “இஸ்ரயேல் வீட்டாருக்கும் யூதா வீட்டாருக்கும் நான் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவேன்” தாவீதின் வீட்டார் அனைவரும்



வெட்டப்படும் நிலையில் அனைத்தும் இருண்டுபோனதுபோல் தோன்றினாலும், தாவீதிலிருந்து புதிய தளிர் ஒன்றை முளைக்கச் செய்வேன் என்று ஆண்டவர் வாக்குறுதியளிக்கிறார். இந்தப் புதிய தளிர் தாவீதின் வழித்தோன்றல் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார். இத்திருவருகைக்காலத்தில் நாம் காத்திருப்பது அவருக்காகத் தான்.

இவ்வாறு நாம் ஆர்வத்துடன் காத்திருக்கையில், ஒருவருக்கொருவர் மற்றும் அனைவருக்கும் இடையே அன்பை அதிகரிக்கவும் பெருக்கவும் புனித பவுல் நமக்கு அறிவுறுத்துகிறார். தந்தையாம் கடவுள் முன் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு நம் உள்ளங்கள் உறுதியாய் இருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இந்த ஒப்புரவு காலத்தில் தியானம் மற்றும் பிற ஆன்மீகப் பயிற்சிகளில் நமது இறைவேண்டலை ஆழப்படுத்த தீவிரமான நடவடிக்கை எடுப்போம். நாம் வலிமையிலும், தூய்மையிலும் வளர நமது திறன்களும், ஆன்மீக வலிமையும் மிகவும் முக்கியமானது. கிறிஸ்மஸ் பெருவிழா கொண்டாட்டத்திற்கு நம்மைத் தயாரிக்கவும், மேலும் லூக்கா நற்செய்தியிலிருந்து எடுக்கப்பட்ட இன்றைய நற்செய்தியின் வழியாக இயேசுவின் இரண்டாம் வருகையான இறுதிதீர்ப்பைப் பற்றிய விழிப்புணர்வைத் தரவும் திருஅவை நம்மை அழைக்கிறது.

ஆண்டவருடைய நாள் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாததால் விழிப்புடன் இருக்கவேண்டியதன் அவசியத்தை இயேசு தம் சீடர்களிடம் விளக்குகிறார். இது நமக்கும் ஒரு வற்றாத அழைப்பு. கடலின் கொந்தளிப்பு, அச்சமூட்டும் காட்சிகள் என்று புனித லூக்கா இறுதி வருகையைப் பற்றிய ஒரு அச்சமிகு காட்சியை நமக்குத் தருகிறார். ஆனால், ஆண்டவர் மாட்சியோடு வரும் அந்நாளில், மீட்பு நெருங்கி வருகின்றது, தலை நிமிர்ந்து நாம் நிற்கவேண்டும் என்று நமக்கு எச்சரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு திருவருகைக் காலத்திலும் அடையாளங்களை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனாலும் எப்போதும் தயாராய் இருப்போம்.

உலகின் பொறிகளுக்கு இரையாகிவிடாமல் நமக்கு முன் சென்ற புனிதர்களின் வாழ்வையும் அறிவுரைகளையும் பாருங்கள். பூமியில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் கிறிஸ்துவின் மாட்சிமிக்க வருகையிலும், இந்த மானிட வாழ்க்கையில் இருந்தாலும் ஏற்கெனவே விண்ணக வாழ்வையும் உரிமையாக கொண்டுவிட்டனர்.

எல்லா நேரத்திலும் தயாராயிருங்கள்! ✤

அவரை அன்பு செய்பவர்களுக்கும் அவரின் விருப்பத்தை நிறைவேற்றுபவர்களுக்கும் கடவுள் வாக்களிக்கும் விண்ணக மாட்சியில் நாம் நம்பிக்கை கொள்ளலாம்.

(கமபோ 1821)







**இன்றைய இறைவார்த்தை:**

எரேமியா 33:14-16

திபா: 25: 4-5, 8-10, 14

1 தெசலோனிக்கர் 3: 12-4:2

லூக்கா 21: 25-28, 34-36

INTERNAL CIRCULATION ONLY
BUL 48/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org